**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 25/2020**
**நாள்.12.09.2023**
**வா.சா.1- கங்கம்மாள்**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி**

தாவா சொத்தை எனது மாமனார் ராசு, எனது நாத்தனார் மல்லிகா, வெள்ளையம்மாள், காட்டுராணி, எனது கணவர் முருகன் ஆகியோர்களிடம் இருந்து கிரையம் பெற்றேன். எனது கணவர் முருகன் மற்றும் அவரது சகோதரர்கள், எனது மாமனார் ராசுவிடம் இருந்து வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்றார்கள் என்பது தவறு என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை சின்னம்மாள் அனுபவித்து வந்ததற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் செய்து கொடுத்தவர்கள் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்ததை காட்டக்கூடிய வருவாய்த்துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி எனக்கு ஞாபகம் இல்லை. சொத்துக்களின் சுவாதீனத்தை அடைந்து வழக்கு தாக்கல் செய்த தேதி வரை எந்த ஒரு இடையூறும் இன்றி அனுபவம் செய்து வந்ததாக வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் பிரதிவாதிகள் இடையூறு செய்ததால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 05.03.2005ம் தேதி பிரதிவாதிகள் இடையூறு செய்தது சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் வழக்குரையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் தான் பிரதிவாதிகளை இடையூறு செய்து அது சம்பந்தமாக புகார் அளிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. சொத்துக்களுக்கு சம்பந்தம் இல்லாத நபர்களிடம் இருந்து போலியான ஆவணங்களின் மூலம்

கிரையம் பெற்றுள்ளதால் சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றாலும், அதனால் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN
**Principal District Munsif**
**Vedasandur**